**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 101/2022** **நாள்.26.03.2024**

2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 26 நாள் வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாராமன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | நாராயணசாமி | சாதி | |
| கிராமம் | அவியூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 68 |

**வ.சா.3**

**குறுக்கு விசாரணை**

I. என்னை சாட்சியம் அளிக்க வாதி அழைத்து வந்தார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். வாதி பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இரண்டு நிலம், வீடு மற்றும் சென்னை அண்ணா நகரில் உள்ள வீடு ஆகியவற்றில் பாகம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா நிலம் அவியூரில் உள்ளது. மேற்படி நிலத்திற்கு அருகில் என் நிலம் இருந்தது . அதை விற்றுவிட்டேன். சிவலிங்கம் என்பவருக்கு அவியூரில் நிலம் உள்ளது என்றாலும் எனக்கு அவியூரில் நிலம் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு இருந்த நிலத்தை நான் விற்றுவிட்டேன். எனக்கு அகலூரில் தான் சொத்து உள்ளது என்றாலும் அவியூரில் சொத்து இல்லை என்பதால் வழக்கு சொத்து பற்றி தெரியாது என்றால் சரியல்ல. பூர்வீக சொத்தை விற்றுவிட்டு வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்றார்கள். அப்போது நான் உடன் இருந்தேன். தாவா 1 , 2 அயிட்ட சொத்துக்கள் சிவலிங்கம் என்பவர் ஆனந்தி (எ) பரமேஸ்வரி என்பவரிடம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் 25.03.1997 கிரையம் பெற்றது என்றால் சரிதான். மேற்படி கிரையத்தை சிவலிங்கம் ரூ.40 ஆயிரம் கொடுத்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

II. தாவா 3, 4 அயிட்ட சொத்துக்களை சிவலிங்கம் போந்தை கிராமத்தில் உள்ள சொத்துக்களை கொடுத்து பரிமாற்றம் செய்து கொண்டார் என்றால் சரிதான். சிவலிங்கம் போந்தை கிராமத்தில் உள்ள சொத்தை ராணி, ஆதிமூலம், பிரபாகரன் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சிவலிங்கத்தின் பெற்றோருக்கு சொந்தமானது.

வழக்கு சொத்துக்கள் அனைத்தும் சிவலிங்கம் பெயரில் உள்ளது என்றால் குடும்பத்தில் பெரியவர் என்பதால் அவர் பெயரில் உள்ளது. சிவலிங்கம் வாதிக்கு பாகம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார். வழக்கு சொத்துக்கள் சிவலிங்கம் என்பவர் பெயரில் உள்ளது என்றாலும் அவர் இறந்த பின்பு பிரதிவாதிகளுக்கு உரிமையானது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவலிங்கம் 3 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். சிவலிங்கம் 2011 ம் ஆண்டிற்கு பிறகு ஊருக்கு வருவதில்லை என்றால் சரியல்ல. சிவலிங்கம் 2015 ல் பிரதிவாதிகளுக்கு தானபத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றாலும் அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு உரிமையானது என்றால் சரியல்ல. சிவலிங்கம் இறந்த பின்பு நிலத்தை அளக்க வந்த போது பொய் பத்திரம் என்று தெரியவந்தது. எனக்கு வழக்கு சொத்து பற்றி எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. சிவலிங்கம் இறந்த பின்பு பஞ்சாயத்து வைத்தோம். நான் சொல்லியுள்ளது போல் பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.